**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 9/2020</u>**

நாள் 18.11.2025

PW1 – லோகநாதன்

த/பெ – அம்மாசை கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of November 2025)**

**<u>1 முதல் 6, 38 முதல் 45 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. தாவா சொத்தானது விவசாயம் செய்யாமல் தரிசாக இருந்து வருகிறது என்றால் சரிதான். கடந்த 15.04.1956–ம் தேதியன்று பாவுதீன்சாயபுவின் 5 வது மனைவி கைருன்பீவி என்பவருக்கு 31.05 ஏக்கர் பூமியில் பொதுவில் 1/8 பங்கினை பொறுத்து ஒரு சுல்தான்மைதீன்சாயபு, அப்துல்சுபான்சாயபு, அமீனுதீன்சாயபு மற்றும் அமானுல்லாசாயபு ஆகியோர்களுக்கு ஒரு விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரிதான். அதேபோல், பெண் மக்களான ரொகையாபீபி வகையறா கடந்த 16.04.1956–ம் தேதியில் விடுதலை ஏற்படுத்தி கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த விடுதலை ஆவணங்கள் ஏற்பட்ட காலத்தில் எனது அப்பா அம்மாசை கவுண்டர் சொத்தை கிரையம் வாங்கவில்லை என்றால் சரிதான். சிராஜ் அகமது கான், ஆரிப்புல்லாகான், பசில் அகமதுகான், சானவாஸ்பேகம், ரகிபாரதுல் பேகம், சபில்அகமது கான் மற்றும் கருப்பண்ண கவுண்டர் ஆகியோர்களுக்கு சுல்தான்மைதீன்சாயபு, அப்துல்சுபான்சாயபு, அமீனுதீன்சாயபு மற்றும் அமானுல்லாசாயபு ஆகியோர்கள் சேர்ந்து 31.05 ஏக்கர் சொத்தை கடந்த 12.07.1966–ம் தேதியிட்ட கிரைய பத்திரம் மூலம் கிரையம் கொடுத்து

விட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி வீதம் ஏற்கனவே விற்பனை செய்யப்பட்ட சொத்தை எனது அப்பா உரிமை இல்லாத நபர்களிடம் இருந்து கடந்த 06.09.1967 மற்றும் 13.07.1967 மற்றும் 29.11.1967 ஆகிய தேதிகளில் ஏற்படுத்திக்கொண்டுள்ள கிரைய ஆவணங்கள் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. கருப்பண்ண கவுண்டர் தான் கிரையம் பெற்ற பகுதி சொத்தினை 16–ம் பிரதிவாதி சுப்பிரமணியம் வகையறாவிற்கு கிரையம் கொடுத்து விட்டார் என்றால் சரிதான்.

2. 25 முதல் 31 வரையிலான பிரதிவாதிகளை எதற்காக இந்த வழக்கில் கட்சி சேர்த்துள்ளோம் என்றால் அவர்களும் சொத்தில் உரிமை இருப்பதாக சொல்லி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டதின் பேரில் அவர்களை வழக்கில் கட்சி சேர்த்துள்ளேன். கடந்த 12.07.1966–ம் தேதியிட்ட கிரைய பத்திரம் மூலம் கிரையம் பெற்ற சொத்தில் 50 சென்ட் இடத்தை ஈட்டிவீரம்பாளையம் கிராம பஞ்சாயத்து ரோட்டிற்காக தானமாக கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் சொல்லும் முன் வழக்கான அ.வ.எண்.209/1998 வழக்கின் தீர்ப்பாணையை தாக்கல் செய்துள்ளேன். 1 முதல் 6 பிரதிவாதிகளின் தந்தையான சிராஜ் அகமதுகான் இறந்த பின்பு அவர்களது வாரிசுகளை சேர்த்து தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி அ.வ.எண்.209/1998 ஆனது அந்த வழக்கின் வாதிகள் ஆஜராகத நிலையில் வழக்கை தள்ளுபடி செய்து பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.209/1998 வழக்கில் எனது அப்பா ஆஜராகி இருந்தார் என்றால் சரிதான். அதனால், அந்த வழக்கின் விபரங்கள் எனது அப்பாவிற்கும், அவரைத்தொடர்ந்து எனக்கும் தெரியும் என்றால் சரியல்ல. மேற்படி வீதம் தாவா சொத்துக்களை 15.04.1956–ம் தேதியிட்ட விடுதலை

பத்திரப்படியும் மற்றும் 16.04.1956–ம் தேதியிட்ட விடுதலை பத்திரப்படியும் மற்றும் 12.07.1966–ம் தேதியிட்ட கிரைய ஆவணங்களின் படியும் 1 முதல் 11 பிரதிவாதிகளுக்கும் தாவா சொத்துக்களை பொறுத்து ஆவணங்கள் ஏற்பட்டுள்ள விபரம் எனது அப்பாவிற்கு தெரியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. நான் இந்த வழக்கை எனது அப்பா எனக்கு எழுதி கொடுத்த பொது அதிகார ஆவணத்தின் பேரில் தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அவ்வாறு நான் இந்த வழக்கு தாக்கல் செய்யும் போதும், அதன் பின்னிட்டும் மேற்படி வீதம் 1 முதல் 11 பிரதிவாதிகள் பெயரில் 15.04.1956–ம் தேதியிட்ட விடுதலை பத்திரப்படியும் மற்றும் 16.04.1956–ம் தேதியிட்ட விடுதலை பத்திரப்படியும் மற்றும் 12.07.1966–ம் தேதியிட்ட கிரைய ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்று நான் எந்தவொரு பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். 1912–ம் ஆண்டு முதல் தாவா சொத்துக்கள் பாவுதீன்சாயபுவின் பெயரில் தான் இருந்து வந்தது என்றும், 1956–ம் ஆண்டிற்கு பின்னிட்டு தான் அவரது ஆண் வாரிசுகள் பெயரில் பட்டா மாற்றம் ஏற்பட்டு இருந்து வந்தது என்றால் அது எனக்கு தெரியாது. எனது தகப்பனார் கிரையம் பெறுவதற்கு முன்பாக அவருக்கு கிரையம் கொடுத்தவர்கள் பெயரில் சொத்திற்கு பட்டா இல்லை என்றால் அது எனக்கு தெரியாது.

4. ஈட்டிவீரம்பாளையம் கிராமத்திற்கு ஒட்டினார்போல் அமைந்தள்ள கிராமங்களான பொங்குபாளையம் கிராமம் மற்றும் பழங்கரை கிராமம் ஆகியவற்றில் சுமார் 50 ஏக்கருக்கு மேலாக எனது தாத்தாவான கருப்ப கவுண்டருக்கு சொத்து இருந்தது என்றால் சரிதான். அதனால், அந்த பகுதியில் எனது தாத்தா கருப்ப கவுண்டர் தான் பெரிய விவசாயியாக

இருந்து வந்தார் என்றால் சரிதான். அதனால், எனது அப்பா தனது செல்வாக்கை பயன்படுத்தி உரிமையில்லாத நபர்களிடம் கிரைய ஆவணங்களை ஏற்படுத்தி கொண்டு பட்டா, சிட்டாவில் பெயர் மாற்றம் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அதனால், அந்த வருவாய் ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. சொத்திற்கான அடங்கல் கணக்குளில் குத்தகைக்கு இருந்த நபர்களின் பெயர் தான் பதிவாகியுள்ளது என்றால் அவர்கள் பெயரும் இருந்தது, அதேபோல் எனது அப்பாவின் பெயரும் பதிவில் இருந்து வந்தது. 1 முதல் 10 பிரதிவாதிகள், 18 முதல் 24, 38 முதல் 45 வரையிலான பிரதிவாதிகள் தாவா சொத்திற்கு அருகாமையில் குடியிருந்து வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. 8,9 பிரதிவாதிகள் அவர்களுடைய பாக சொத்தான 5 ஏக்கர் சொத்தை சிவமனோகர் என்பவருக்கு விற்று விட்டார்கள் என்றால் சரிதான். அந்த சிவமனோகர் இறந்து விட்டதால் தான் அவரது வாரிசுகள் 46 முதல் 48 பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான்.

5. தாவா சொத்துக்களை எனது தந்தை உரிமையுள்ள நபர்களிடம் இருந்து கிரையம் பெறாத நிலையில் தாவா சொத்துக்களில் எங்களுக்கு எவ்வித பங்கு உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை 1 முதல் 11 பிரதிவாதிகள் கிரையம் பெற்றும், அதன் பின்னிட்டு அவர்களிடம் கிரையம் பெற்ற நபர்கள் முழுமையாக அனுபவித்து வருகின்றனர் என்றும், அதனால் தாவா சொத்தில் எங்களுக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து எனது தந்தையார் கிரையம் பெறுவதற்கு முன்பாகவே ஏற்பட்ட 15.04.1956–ம் தேதியிட்ட விடுதலை பத்திரப்படியும் மற்றும் 16.04.1956–ம் தேதியிட்ட விடுதலை பத்திரப்படியும் மற்றும்

12.07.1966–ம் தேதியிட்ட கிரைய ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்று நான் எந்தவொரு பரிகாரமும் உரிய காலக்கெடுவிற்குள் கோராத நிலையில் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதனால் தாவா சொத்துக்களில் எங்களுக்கு எவ்வித பாத்திய உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் 112–ல் 55–3/4 பங்கு பாகம் உள்ளது என்று நாங்கள் சொல்வது தவறு என்றால் சரியல்ல. மேற்படி கடந்த 15.04.1956–ம் தேதியிட்ட விடுதலை பத்திரப்படியும் மற்றும் 16.04.1956–ம் தேதியிட்ட விடுதலை பத்திரப்படியும் மற்றும் 12.07.1966–ம் தேதியிட்ட கிரைய ஆவணங்கள் ஆகியவைகளை திருப்பூர் மற்றும் கோவை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளதாகவும், அதனால் அந்த ஆவணங்க் செல்லாது என்று கூறியுள்ளீர்கள் என்றும், ஆனால் அச்சமயத்தில் வேறு மாவட்டத்திலும் ஆவணங்கள் பதிவு செய்யலாம் என்று சொன்னால் சரியல்ல. அதனால் தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

**(9–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.11.18 18:57:29 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**